**தலைப்பு 1 – சனாதிபதி செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016**

---

தலைப்பு 1 – 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள் பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஒக்தோபர் 11 ஆந் திகதி வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

சனாதிபதி செயலகத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 6,860.38 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 6,183.29 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சனாதிபதி செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 677.09 மில்லியன் அதாவது 9.87 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
| --- | --- | --- | --- | --- |
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 2,063.99 | 1,985.10 | 78.89 | 3.82 |
| மூலதனம் | 4,796.39 | 4,198.19 | 598.20 | 12.47 |
| மொத்தம் | **6,860.38** | **6,183.29** | **677.09** | **9.87** |

## 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்**

சனாதிபதி செயலகத்தினால் 2016 ஆம் ஆண்டிற்காக 10.02.11.00 வருமானக் குறியீட்டிற்காக ரூபா 35,000 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 35,976 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 102.78 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மிகை மதிப்பீட்டின் சதவீதமாக |
| --- | --- | --- | --- | --- |
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 10.02.11.00 | 35,000 | 35,976 | 976 | .2.78 |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

செயலகத்திற்குரிய 00101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 30.00 | 29.55 | 18.00 | 18.96 | 100.00 | 59.86 |

### 2.4 கட்டுநிதி கணக்கு

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சனாதிபதி செயலகத்தின் கீழான 02 கட்டுநிதிக் கணக்கின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 45.77 மில்லியனாக ஆக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 7002/0000/00/0117/0014/000 | 45.76 |
| 7002/0000/00/0117/0015/000 | 0.01 |
| | 45.77 |

### 2.5 பொது வைப்புக் கணக்கு

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சனாதிபதி செயலகத்தின் கீழான 06 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 832.32 மில்லியனாக இருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கின் இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0020/0009/000 | 119.59 |
| 6000/0000/00/0002/0113/000 | 1.78 |
| 6000/0000/00/0013/0073/000 | 402.50 |
| 6000/0000/00/0016/0060/000 | 15.98 |
| 6000/0000/00/0018/0072/000 | 0.14 |
| 6000/0000/00/0006/0077/000 | 292.33 |
| மொத்தம் | 832.32 |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

சனாதிபதி செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

சனாதிபதி செயலகத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன் கணக்கின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பெறுமதி மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் நிலையான சொத்துக்களின பெறுமதிக்கு இடையே ரூபா 26.63 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சனாதிபதி செயலகத்தின் 2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டு அளவு 2016 ஆம் ஆண்டில் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் அச்செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டின் அளவுடன் ஒப்பிடும் போது குறைநிரப்பு மதிப்பீட்டு நிதிஏற்பாட்டு அளவு, பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டிற்கு ஒப்பாக 20 சதவீதம் முதல் 1,936 ஆன வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் 03 செலவின விடயங்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு பூச்சிய பெறுமதியொன்றை எடுத்திருந்த போதிலும், குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் அச்செலவின விடயங்களுக்காக ரூபா 57.64 ஒதுக்கப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 10 செலவின விடயங்களுக்கு 2016 ஆம் ஆண்டிற்கு மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டமையால் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் 25 சதவீதம் முதல் 76 சதவீதம் வரையான வீச்சில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் முன்னைய ஆண்டின் வைப்புக்கள் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் சனாதிபதி செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 662.97 மில்லியனான வைப்புக்கள் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.4 பொறுப்புக்களுக்கு உட்படல்

மீளாய்வாண்டின் போது நிதிப்பிரமாணம் 94(1) ஏற்பாடுகளுக்கு முரணாக 20 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை விஞ்சி ரூபா 64.91 மில்லியனான பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்தது.

### 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகத்தின் செயலாற்றல் அறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்கள் கடப்பதற்கு முன்னர் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வறிக்கை 2017 யூலை 18 ஆந் வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

சனாபதிபதி செயலகத்தின் செலவின விடயம் 01-2-6-3-2502 அபிவிருத்தி ஆரம்ப கூட்டிணைப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் முதலீட்டிற்காக செலவிடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4.83 மில்லியன் அந்நோக்கங்களுக்கு புறம்பாக வெவ்வேறு நபர்களின் மரணச் சடங்குகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

### 3.7 செயலாற்றல்

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்கு இடையே கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்படாதிருந்தமை செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(அ) பின் அறுவடை சேதத்தை குறைத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக உதவுவதற்காக பின் அறுவடை பாதுகாப்பு தொழில்நுட்பம், வீட்டு முகாமைத்துவம், பின் அறுவடை சேதத்தை குறைத்தல் தொடர்பாக விவசாயிகளை அறிவூட்டுதல் மற்றும் வசதிகள் வழங்குதல் என்பன எதிர்பார்க்கப்பட்டிருந்தன. இதற்காக ரூபா 20 மில்லியன் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நஞ்சற்ற உணவுப் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பதற்காக ரூபா 115 மில்லியன் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை 11 பயிர் வகைகளை பயிரிடுவதற்கும் சேதனப்பசளை உற்பத்தி செய்யவும் ரூபா 59.35 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ‘‘பிள்ளைகளைப் பாதுகாப்போம்’’ தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறுவர் பாதுகாப்பிற்காக துரித கவனம் செலுத்துவதற்காக ரூபா 120 மில்லியன் மற்றும் நீதிமன்ற மற்றும் சட்டரீதியான விடயங்கள் தொடர்பாக திருத்தங்களை ஏற்படுத்துவதற்காக ரூபா 40 மில்லியன் செலவின மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடுகளில் செயன்முன்னேற்றம் தொடர்பாக தகவல் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | | | வெற்றிடங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிரந்தர | தற்காலிக | நிரந்தர | தற்காலிக | ஒப்பந்தம் | நிரந்தர | தற்காலிக |
| (i) | சிரேஷ்ட நிலை | 63 | 163 | 56 | 67 | 23 | 07 | 73 |
| (ii) | மூன்றாம் நிலை | 18 | 42 | 08 | 20 | 05 | 10 | 17 |
| (iii) | இரண்டாம் நிலை | 318 | 129 | 276 | 68 | 30 | 42 | 31 |
| (iv) | ஆரம்ப நிலை | 619 | 144 | 312 | 27 | 30 | 307 | 87 |
| | மொத்தம் | 1,018 | 478 | 652 | 182 | 88 | 366 | 208 |

07 சிரேஷ்ட நிலை தர பதவிகள் உட்பட நிரந்தர பதவிகளில் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 366 ஆக காணப்பட்டமை சனாதிபதி செயலகத்தின் செயலற்றலுக்கு பாதகமான வகையில் தாக்கமளித்தால் அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் தேவையாக இருந்த போதிலும் அவ்வாறு பாதகமாக தாக்கமளித்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் திருத்தியமைத்தல் தேவைப்பாடும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.